## இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

## அசல் வழக்கு எண்.106/2012

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.அ.சீனிவாசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அசோக்குமார் | தந்தை/கணவர் பெயர் | : | |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 06.04.2023.

**P.W. : 1**

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

என் தகப்பனாருக்கும் என் பெரியப்பா சீரங்க கவுண்டருக்கும் இடையே நடைபெற்ற பாகபிரிவினைக்கான பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் அசல் ஆவணங்கள் உள்ளது. என் தகப்பனாரும் பெரியப்பாவும் இருவரும் சேர்ந்து வாங்கிய சொத்தில் எனது தாத்தாவுக்கு உரிமையில்லை என்றால் சரிதான். என் தகப்பனாரும் எனது பெரியப்பாவும் சேர்ந்து வாங்கிய சொத்தில் எனது தாத்தா ராமசாமி கவுண்டர் அவரது பெயரிலேயே கரும்பு பதிவு செய்து கரும்பு வெட்டி ஆலைக்கு அனுப்பினார் என்று நான் சொல்லியுள்ளதற்கு ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பாட்டி கருப்பாயி அம்மாளுக்கு சம்மந்தப்பட்ட சொத்துக்களை எப்போது வாங்கியுள்ளார் என்றால் 1973 ஆண்டில்

வாங்கினார். கருப்பாயி அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எதுவும் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். கருப்பாயி அம்மாள் எனக்கும் எனது பெரியப்பா சீரங்க கவுண்டரின் மகன்களுக்கும் சொத்து எழுதி கொடுத்துள்ளதாக அசல் வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் பக்கத்தில் யாருடைய கையெழுத்தும் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் பக்கத்தில் இரண்டு வேறுபட்ட மையினால் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் அது Fade ஆகியிருக்கலாம். முதல் பக்கத்தில் இடைச்சொருகலாக எழுதப்பட்ட எழுத்துக்கள் எப்போது எழுதப்பட்டது என்ற குறிப்பு இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் பக்கங்களின் எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் பக்கத்தில் கடைசி வரியில் எழுத பாக்கி இடம் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் அந்த ஆவணத்தில் இரண்டாவது பக்கத்தில் எழுத்துக்கள் பெரியதாகவும், சிறியதாகவும் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்தவர்களின் பெயர் மற்றும் விலாசம் தனியாக எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் எந்தவொரு ஸ்டாம்பும் ஒட்டவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணமானது என்ன ஆவணம் என்று தலைப்பு இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் நானும் எனது தகப்பனாரும் சேர்ந்து தயாரித்துக் கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொத்து விவரம் என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தினை 1ம் பிரதிவாதி சீரங்க கவுண்டர் ஒப்புக்கொள்ளவும் இல்லை என்றும் அதுவொரு

ஆவணமாக எழுதி கையொப்பம் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து எனது தகப்பனார் மற்றும் பெரியப்பா பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்களை பாக பிரிவினை செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகவே எனது தகப்பனார் இந்த தாவா சொத்தை பொறுத்து எனக்கு எல்லை போட்டு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் என் வழக்கில் கூறியுள்ளபடி அனுபவமும் தாவா சொத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் இந்திய பதிவு சட்டம், முத்திரை கட்டணச்சட்டம் மற்றும் சாட்சிய சட்டப்படி ஏற்கத்தகுந்த ஆவணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு தகுந்தாற்போல் என் தந்தை எழுதி வைத்த வா.சா.ஆ.4 தானசெட்டில்மெண்ட் ஆவணத்திற்கு ஏற்றாற்போல் வா.சா.ஆ.3 ஆவணம் எங்களால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் என் தாத்தா எந்த காலத்திலும் அவர் பெயரில் கரும்பு சாகுபடி செய்யவில்லை என்றால் சரியல்ல. பாக பிரிவினை செய்யப்படாமல் இருப்பதால் தாவா சொத்தினை பொறுத்து கூட்டுரிமையாளரான 1ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர எனக்கு சட்டப்படி உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பாகம் பிரியாத சொத்துக்கள் என்றும் முறையாக பாகம் பிரிவினை செய்யாமல் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் என் தகப்பனாருக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. தாவா சொத்துக்களை பொறுத்து சீரங்க கவுண்டரின் மகன்களுக்கு ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்துக்களை பார்த்துக் கொள்வது சீரங்க கவுண்டரின் மகன்கள் தான் என்றால் சரியல்ல. வழக்கு

தாக்கல் செய்ததற்கு பின்னர் தான் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களை பற்றி பிரதிவாதிகளுக்கு தெரிய வந்தது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணமே மோசடியானது என்பதால் அதனை தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.4 ஆவணம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா கூட்டு பட்டாவாகத்தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களை முறைகேடாக நான் அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் என் தகப்பனார் பெயரில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**(பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக கால அவகாசம் வழங்கப்பட்டது)**